# சொல்லும் இசையும் சேர்ந்த சிவன்

கி. சந்திரசேகரன்

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு சம்பவம். திருமயிலை கபாலீசுவரரின் பிரமோத்ஸவத்தின் ஒன்பதாவது திருநாள். அன்று இரவு முழு மதி வான வீதியில் கிளம்புவ தற்குச் சரியாய் பிக்ஷாடன மூர்த்தி தமது பரிவாரங்கள் ஒன்றுமின்றித் தனிப் புறப்பாடு செய்வார். கையில் கபாலம் ஏந்தி, சடைமுடி யுடன் பரமனே அன்புப் பிச்சை வேண்டித் தெரு வழியே வரும் கோலம் அது.

மயிலாப்பூர் மாட வீதிகளுக்கெனத் தனியோர் அழகு பொருந்திய காலம் அது. வீடுகளில் கடைகளாக முழுவதும் நிரம்பாத காலம். தெரு வில் வீட்டுக்கு வீடு வாசலில் கற்பூர ஹாரத்தி எடுக்கப் பெண்கள் நிற்பார்கள். மக்கள் போட்டியிட்டுச் சுவாமி வருவதை எதிர்கொண் டழைப்பது வழக்கம். பிச்சாண்டி மேற்கு மாட வீதியின் நடுவே உள்ள அரச மரத்தடிக்கெதிரே நின்றபின், அம்பாள் கோயிலை விட்டு வாத்தி யங்கள் அதிகம் இல்லாமல் எதிரே வந்து மூன்று தடவை பிக்ஷாடனரை வலம் வந்து நின்று கோயிலுக்கு அவருடன் கிளம்பிச் செல்லுவது சம்பிரதாயம். ஐதிகம் என்ன வெனில், சிவனார் தமது இல்லத்தைவிட்டு விரக்தராய் வெளிக் கிளம்பிப் பிச்சை எடுத்து உண்டு வாழ முயல்கின்றார்; அம்பாள் அவரு டைய துறவு வேகத்தைத் தணித்து, அவரை வேண்டித் தன்னுடன் மறுபடியும் கோயிலுக்கே அழைத்துச் செல்லுகிறாள் என்பதாம்.

உத்ஸவமூர்த்திக்குப் பின்னே வேதபாராயண மும் பஜனை கோஷ்டிகளும் தொடருவது சகஜமான காட்சி. அன்று நிகழ்ந்த பஜனையில் மேலே எழும்பிய குரல் சுருதியுடன் இணைந்து பின்வரும் பாட்டைப் பாடியது செவிகளில் விழுந்தது.

> கடைக்கண் நோக்கி காவாததும் ஏனோ
> கருணாகரனே, ஹரனே !

என்ற பல்லவிக்கு அடுத்த,

> அடைக்கல மென்று அடியேன் உன்னை நம்பி
> அலறுவதுன் செவி புகவில்லையோ—அடிமை

என்ற அனுபல்லவியும் தெளிவாய்க் கூட்டத் தைத் தாண்டி வெளியிலும் கேட்கும்படியான அளவில் குரல் கம்பீரமாய் அமைந்திருந்தது. ராக பாவமும் சாகித்தியமும் சேர்த்து நிஜமா கவே ஓர் அற்ப ஜீவன் தன்னைப் படைத்த பரம் பொருளை அடைய வேண்டுவது போன்ற ஏக்கம் கலந்த குரலாகவே அச்சமயம் தோன்றி யது. தாங்க இயலாத விசுவ வேதனைதானோ என்றே ஒரு கணம் எல்லோருடைய இதயங் களிலும் தனியொரு சோகம் குடிகொண்டது. கேட்டவர்கள் பாடுகின்றவரையும் மறந்து அருகே பந்தலின் கீழ் நிற்கும் கருணாகரனையே நினைக்கச் செய்து விட்டது, அந்தப் பாட்டு. உள்ளம் உருகி நின்றவர்களின் மத்தியில் மிகவும் சிறிய தோற்றம் படைத்த பாடகர் கண்களை இறுக மூடிக் கொண்டும், பிரயாசை யுடன் குரலை எழுப்பிக் கொண்டும் இருந்தது கிட்ட நெருங்கியதும் தெரிந்தது. தொண்டையி லிருந்து வரும் சப்தம் தாரையாய்க் கிளம்பா விட்டாலும், உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் வகையில் நாதப் பெருக்காய் எங்கும் பரவியது. இனிமையான குரல் இல்லைதான். இருப்பினும் பூர்ண சங்கீதம் அதில் நிரம்பி வழிந்தது. குரல் அழகாக அமைந்திருப்பினும், ஜீவனை உலுக் கும் அத்தனை முழுமை அதற்கு இருந்திருக் குமோ என்றே வியக்கத் தோன்றியது. பாடியது பாபநாசம் சிவன் அவர்கள்.

தமிழ் இசை இயக்கம் தோன்றிப் பெரிதாய் வளர்ந்து, சங்கீத உலகில் தனியரசு செலுத் தாத பொழுது, ஒருவிதத் தூண்டுதலுமில்லாமல் தாமாகவே தமிழில் பாடியும், சொந்த சாகித்தி யங்களை உருவாக்கியும் திளைத்த பெருமை வேறு யாருக்கும் கிட்டியதில்லை. ''எனக்குச் சங்கீதக் கச்சேரி செய்வதில் ஆர்வம் குறைவு தான்; பஜனை செய்வது ஒன்றே என்னைத் தெய்வ பக்தியில் லயிக்கச் செய்கிறது பஜனை.

தோறும் நான் தமிழில் பாடுகையில் சுற்றியுள்ள முகங்களில் காணும் மலர்ச்சியும், பக்திப் பெருக்கும், என்னை நெகிழ வைக்கின்றன. ஆகையால் தமிழ்ப் பாட்டைப் புனைவதில் என்றுமில்லாத இன்பம் பெருகிறேன்'' என்பார் மிகவும் அடக்கமாய்.

வாழ்க்கையில் வறுமைப் பிணியினின்று அவரை மீட்டது இசைச் செல்வம் என்றால் மிகையாகாது. திருவனந்தபுரத்துக்குச் சிறு பிராயத்தில் தாயாருடன் உணவுப் பஞ்சத்தைத் தவிர்த்துக் கொள்ளவே சென்றார். அவ்விடம் ஸம்ஸ்கிருதப் பாடசாலை ஒன்றில் ''வியா கர்ணம்'' பயின்று. ''உபாத்தியாய'' என்ற பரீட்சையிலும் தேர்வு அடைந்தார். ஆனால் கல்வி பயிலுவதை விடவும் இசையே அவரைச் சீக்கிரம் தன்வசப்படுத்திவிட்டது. அங்குள்ள பெரிய வித்துவானான நீலகண்ட சிவன் போன்றவர்களின் இசையமுதை உண்டு தெளிந்து, சீக்கிரமே இசைப் பயிற்சியையும் முறையாக நூரணி மகாதேவ பாகவதர், சாம்ப பாகவதர் போன்றவர்களிடம் பெற்றார். பிற் பாடு தஞ்சையை அடைந்து அக்காலத்தில் கர்நாடக சங்கீத உலகில் பளிச்சிட்ட கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யரிடம் குருகுலவாசம் செய்து, மேலும் சங்கீதத்தை வளர்த்துக் கொண்டார். கர்நாடக சங்கீதத்தை லட்சணங் களுடன் பயின்றதற்காக, தமது முழு ஆசை யையும் கவர்ந்த தேவாரம், திருவாசகம், அருட்பா முதலியவற்றைப் பாடாதிருந்ததே இல்லை. சிவன் பஜனை என்றால், கூட்டம் தெருவெல்லாம் அடங்கி நின்று கேட்பது என்றுமே நிகழும் ஒர் அனுபவமாகியது. தேவாரத்தைப் பாடிப் பாடி அதன் இனிமையில் துழாவித் துழாவி நீந்தி வந்தவர். அக்காரணமே இன்றும் அவருடைய சாகித்தியங்களின் தமிழ் நயம் தனித்தே சுவையூட்டுவதாக இருக்கின்றது. எளிமையின் சிகரம் எனலாம் அவருடைய சாகித்திய பாஷையை.

'என்று தணியும் இந்த தாகம்' என்றே தொடங்கியவர், தமிழ்க் கீர்த்தனங்களைக் கணக்கிலடங்காதுதான் செய்து வந்தார். வாக்கும் கேயமும் மணந்து மாலையிட்ட பந்தல் அவருடைய சாகித்திய ஸ்வரச்சேர்க் கைகளே. ஸ்வரங்களின் கோவைகளைச் சாகித்தியத்தின் சொல்லழகுடன் இணைப்பது சுலபமல்ல என்பதைப் பிறர் செய்துள்ள சாகித் தியங்களை இவருடையதுடன் ஒப்பிட்டுப் பார்த்து அறிந்து கொள்ளலாம். சொல்லும் இசையும் சேர்ந்து ஏக காலத்தில் பிறப்பதுதான் ஒரு வாக்கேயக்காரனுடைய உண்மைத் திற னைக் காட்டுவது. சொல் ஒருவரிடமும், வர்ண மெட்டு மற்றவரிடமும் உருவாகிப் பிணைந்த சங்கீதம் எப்படியும் தரக்குறைவுடன் தோன்றுவதில் வியப்பில்லை. வாக்கேயக் காரருக்கான சக்தி தனி வரம் பெற்றுத்தான் உருவாக வேண்டும்.

''என்னுடைய கீர்த்தனங்களைப் பிறருக்குச் சொல்லி வைக்க எனக்கு மிகுந்த ஆசைதான். நான் எத்தனையோ இதர வகைகளான வர்ணங்கள், தில்லானாக்கள் செய்திருக் கிறேன். நேரில் என்னிடம் சிட்சை பெறுவார் களானால் அதைவிட எனக்கு வேறு பேறு வேண்டியதில்லை'' என்பார் அடிக்கடி.

தமக்குச் சொந்த சாகித்தியம் படைப்பதில் அனுபவமும், தேர்ச்சியும் இருப்பதை எண்ணித் தற்பெருமையோ அல்லது பிறரிடம் அலட்சிய மனப்பாங்கோ துளியும் அவரிடம் கிடையாது.

'பரோபகார சிந்தாமணி' என்ற விருதைக் காஞ்சி பெரியவாளிடமிருந்து பெற்ற ஒரு பெரியார் மயிலாப்பூரில் அக்காலங்களில் வாழ்ந் தார். அவருடைய இயற்பெயர் ஏ. கிருஷ்ண சுவாமி ஐயர். வாழ்க்கையில் பற்பல நன்மை களைப் பிறருக்குக் கேட்காமலே தாமே செய்து வந்தவர். அவர் அவருக்குத் தேவாரம், திரு வாசகம், அருட்பா, தாயுமானவர் பாட்டுக்கள் இவைகளிலெல்லாம் அலாதிப்பற்றுதல் உண்டு. சிவன் பாட்டிலும் மிக்க ஈடுபாடு அவருக்கு இருந்ததால், மயிலைக் கோயில் பஜனைகளில் எல்லாம் சிவனை அநேகமாக வரவழைக்க ஏற்பாடு செய்வார். சிவனுக்கும் அவரிடம் மிகுந்த மரியாதை உண்டு. ஒரு நாள் நான் சிவன் அவர்களின் தமிழ்சாகித்தியங்களைப் பாராட்டிப் பேசியதும், உடனே அப்பெரியவர் சிறிது கடுமை தொனிக்கும் குரலில், ''எத் தனையோ உயர்ந்த தேவாரத் திருவாசகப் பாட்டுக்களைப் பாடுகிறவனுக்கு, சொந்த சாகித்தியம் செய்யாமல் இருக்க முடிய வில்லையா?'' என்று அலுத்துக் கொண்டார். இதைப் பிற்பாடு சிவனிடம் நான் சொன்னதும், பதிலுக்கு அவர் தமக்கு இயல்பாக உள்ள

அடக்க ஒடுக்கத்துடன், தேகத்தையும் குறுக்கிக் கொண்டு, ''என்னைக் குறை கூறுவதற்கு நான் அப்படி என்ன பெரியவனாகி விட்டேனா? என்றார்.

வினயம் சுபாவமாய் ஒருவரிடம் நிலைத் திருந்தால் அல்லவோ இம்மாதிரியான பதிலை எதிர்பார்க்கலாம்! இரண்டொரு சாகித்தியங் களைச் செய்தபின், அவைகளைப் பற்றித் தாங்களே தமுக்கடித்து, பிறரையும், வதை த்துப்பாடச் சொல்லித் தங்கள் இசைப்பணியை அபாரமாகத் தாங்களே மேம்படுத்த முயலு கிறார்களே! உலகம் போய்க் கொண்டிருக்கும் ரீதியில் நாம் இவ்விதப் படாடோபங்களையே எங்கும் காண முற்படுகிறோம். ஆனால் பல காலமாய் ஒன்றை ஒன்று வென்ற சாகித்தியங் களைச் செய்தும், அவைகளைப் பல வித்து வான்கள் சுவையுடன் கையாண்டு வருவதைக் கண்டும், துளியும் தமது அடக்கத்தை மாற்று வதற்கு மனத்தினால் எண்ணிக் கூடப் பார்க் காத வேறொருவரை நம்மால் இக்காலத்தில் கண்டுபிடிக்க இயலாது.

தமது வாழ்நாட்களிலேயே தாமே தம் சாகி த்தியங்களை இசைத்தும், பிறர் அவைகளைப் பாடி மெருகேற்றியும் வருவதை நேரில் பார்த்தும், தர்ம கச்சேரி என்று செய்ய முன் வந்தால், தியாக அய்யரின் கிருதிகளையும் தவறாமல் இடையிடையே பாடிய வண்ணம் இருப்பதைக் காண நமக்கே சில சமயம் எதனால் இவர் இவ்விதம் முனைகிறார் என்று சந்தேகம் தோன்றும். சாதாரணமாகப் பாட்டு செய்கிறவர்கள் மகானான அய்யர்வாளின் சிந்தனைகளுக்கிடையே, சொந்த சாகித் தியத்தை நினைவுபடுத்தத் தயங்குவார்கள். ஏற்றத் தாழ்வுகள் ரசிகர்கள் உள்ளங்களில் பளிச்சிடும் அல்லவா? ஆனால் அம்மாதிரி அச்சம் சிவனுக்கு இருக்கிறதாகவே தெரிவ தில்லை. சிவன் தமது பாட்டுப் பயிற்சியினி டையே அய்யர்வாளின் கீர்த்தனங்களைச் சுவைத்துப் பாடாமலிருப்பதேயில்லை. ஒரே ஒரு காரணத்தைத்தான் இவ்வித துணிந்த செயலுக்கு ஊகித்துச் சொல்லலாம். எந்தப் பிரபல சாகித்தியகர்த்தாவினுடையதையும் நகல்படுத்தியோ அல்லது ஞாபகப்படுத்தியோ அவருடைய படைப்புக்கள் பிறக்காததே இவ் விதக்கவலையற்ற போக்குக்கு மூல காரண மாயிருக்க வேண்டும்.

வாக்கேயக்காரருக்கு இன்றியமையாத லட் சணங்கள் சுயத்தன்மையும் தமது உள்ளத்தைத் தவிர வேறொன்றையும் தமது படைப்பில் வடிக்காதிருத்தலும். பாபநாசம் சிவன் அவர்கள் இவ்விதத்தில் தனிச் சிறப்புப் பெற்றவர்.

[பாபநாசம் சிவன் மியூசிக் அகாடமிக்குத் தலைமை தாங்கிய ஆண்டில் எழுதப்பட்டது.]

நன்றி : 'கல்கி'


With Best Compliments
From :

▼

# ASIA LMI PRIVATE LTD.

MADRAS - 600 097